TAMIL MURASU, THURSDAY, 15 SEPTEMBER 2022, PAGE 2

# மனித உடல் நுண்ணுயிர் ஆய்வு நிலையம்

நாள்பட்ட நோய்களையும் உடல் பருமனையும் எதிர்க்க மனித உடலுக்குள் வாழும் நுண்ணுயிர்கள் உதவலாம். அதன் தொடர்பில் புதிய ஆய்வு நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மனித உடல் நுண்ணுயிர் ஆய்வு நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் இயோ, நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் சுப்ரா சுரேஷ் இருவரும் நிலையத்தைத் திறந்துவைத்தனர். நாள்பட்ட நோய்களுக்கும் மனித உடலில் உள்ள நுண்ணுயிர்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி நிலையம் ஆய்வு செய்யும். பரிசோதனை முறைகளையும் சிகிச்சைகளையும் மேம்படுத்த ஆய்வு முடிவுகள் உதவும்.

“நம் உடலுக்குள் பல ட்ரில்லியன் நுண்ணுயிர்கள் வாழ்கின்றன. நலமிக்கவர்களின் உடலில் நுண்ணுயிர்கள் அமைதியாக இருக்கும். நலமில்லாதவர்களின் உடலில் நுண்ணுயிர்கள் சமநிலையில் இல்லாததால், உடல்பருமனும் இதய நோய், புற்றுநோய், நுரையீரல், தோல் தொடர்பான நோய்களும் ஏற்படும் வாய்ப்பு அதிகம்,” என்று பேராசிரியர் சுரேஷ் கூறினார்.